| பல்லை பிடுங்குதல் | - | அடக்கி வைத்தல் |
| அரை மனிதன் | - | மதிப்பு இல்லாதவன் |
| கருவறுத்தல் | - | முற்றாய் அழித்தல் |
| கரை கண்டவர் | - | முற்றும் அறிந்தவர் |
| குட்டிச்சுவராகுதல் | - | கெட்டளிந்துப்போதல் |
| முதலைக்கண்ணீர் | - | பாசாங்கு செய்தல் |
| உள்ளம் கசிதல் | - | மனமிரங்குதல் |
| மண்ணாக்குதல் | - | வீணாக்குதல் |



தொகுப்பு
செல்வநாதன் சஜி
தரம் 5A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொது அறிவு

| | | |
|---|---|---|
| 01. | நாய் உண்ணும் தாவரம் எது? | பால் அறுகு |
| 02. | பணப்பயிர்கள் எவை? | தேயிலை, இறப்பர், தென்னை |
| 03. | சர்வதேச ஒலிம்பிக் தினம் | ஜூன் மாதம் 22ஆம் திகதி |
| 04. | உலக சனத்தொகை தினம் | ஜூலை மாதம் 11ஆம் திகதி |
| 05. | உலக விழிப்புலன் அற்றோர் தினம் | அக்டோபர் 15ஆம் திகதி |
| 06. | உலக சிறுவர் உரிமை தினம் | நவம்பர் மாதம் 20ஆம் திகதி |
| 07. | உலக இளைஞர் தினம் | ஜனவரி மாதம் 4ஆம் திகதி |
| 08. | சர்வதேச குடிநீர் தினம் | மார்ச் மாதம் 22ஆம் திகதி |
| 09. | உலக சாரணியர் தினம் | பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி |
| 10. | தேசிய வீரர்கள் தினம் | மே மாதம் 22ஆம் திகதி |
| 11. | உலக அகதிகள் தினம் | ஜூன் மாதம் 20ஆம் திகதி |

12. உலகில் நீண்ட ஆயுள்காலம் வாழும் உயிரினம்
நீர்த்திமிங்கலம் (500 வருடம்)

13. புறவன் கூட்டைக்கொண்டு கொண்டு காண்பவை
நண்டு, இறால், கரப்பான் பூச்சி

14. இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி
சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க




தொகுப்பு:
மொகமட் அக்பர் பாத்திமா
தரம் 5A

# குறிக்கோள்

ஒரு குறிக்கோளை எடுத்துக் கொள்ளுங்கள். அதையே கனவுக் காணுங்கள் அதனை நோக்கியே வாழ்க்கையை நடாத்துங்கள். அந்த கருத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வெற்றிப் பெறுவீர்கள்

தொகுப்பு: சந்திரகுமார் மதுசானி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாள் நெசவாளர்

ஓர் ஊரில் நெசவாளர் ஒருவர் இருந்தார்.அவர் ஆடைகளைத் தைத்து வரும் வருமானத்தின் மூலம் வாழ்க்கை நடாத்தி வந்தார். அவருக்கு ஒரு மனைவி இருந்தாள். அவள் சொல்வதைத்தான் கேட்பான். ஒரு நாள் அவரது நெசவு இயந்திரம் உடைந்துவிட்டது. உடைந்த நெசவு இயந்திரத்தை செய்வதற்காக மரம் வெட்டுவதற்காக காட்டுக்குச் சென்றார்.குளத்திற்கு அருகில் மரம் ஒன்று நின்றது.அதை வெட்டுவதற்கு முற்படும் போது குளத்தில் இருந்து கடவுள் ஒருவர் தோன்றினார். ஏன் இந்த மரத்தை வெட்டுகிறாய் என்று கேட்டார்.அவர் நடந்த அனைத்தையும் கூறினார்.சரி உனக்கு வரம் தருகிறேன் எனக்கடவுள் கூறினார். அதற்கவன் நான் எதற்கும் என் மனைவியிடம் சென்று கேட்டுவருகிறேன் என்று கூறினான்.அவனது முட்டாள் மனைவி நான்கு கைகள் தரச்சொல்லி அனுப்பினாள். அதேபோல நான்கு கைகள் கிடைத்தன.அவன் வீடு திரும்புவதற்கு இரவாகி விட்டது. அந்நேரத்தில் அவனை கண்ட ஒருவர் அய்யோ: புதுரகமான பிராணி எனக்கூறி ஊர்மக்கள் அவனை தடியால் அடித்துக்கொண்டார்கள்.

தொகுப்பு: விஜயகுமார் சார்மி - தரம் 05B

# நேரம் பொன்னானது

பொன்னைக்கூட காசு கொடுத்து வாங்கலாம். நேரத்தைக் காசு கொடுத்து வாங்க முடியாது. ஆதலால் நாம் நேரத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்த வேண்டும். நாம் பொழுது போக்கு நேரத்தில் படித்தல், முத்திரை சேகரித்தல், வீட்டுத்தோட்டம் அமைத்தல் போன்ற விடயங்களைச் செய்யலாம்.நாம் நேரத்தை வீணாக்காமல் படித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம். பொழுது போக்கு நேரத்தில் நாமும் மற்றவர்களும் பயனடையும் வகையில் பல பயனுள்ள விடயங்களைச் செய்யலாம். ஓய்வு நேரங்களில் நூலகங்களுக்குச் சென்று அறிவுக்கு விருந்தான பல நூல்களை வாசிக்கலாம்.அப்படிச் செய்தால் எமக்கு அறிவு வளர்ச்சியடையும் கடைகளில் பத்திரிகைகள் வாங்கிப் படிக்கலாம். அதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு விடயங்களையும் பல அறிவியல் சார்ந்த விடயங்களையும் அறிந்து கொள்ள முடியும். சிறு கதைகள், கவிதைகள் தொடர் கதைகள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம் எமது சிந்தனை சக்திகளையும் விருத்தி செய்து கொள்ள முடியும்.

ஆக்கம்: செல்லத்துரை சிவவதனி. 5B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*

# DHARSHAN TEXTILES

**CALL, SCHOOL ITEMS AND FANCY GOODS**

**NO.78/1, OLD BUS STAND, RAGALA**
**HALGRANOYA**

**☎ 052 226592**

*With best Compliments from*



# AZHKAR HOTEL

**NO.7, ST.LEONARD'S BAZAAR**
**HALGRANOYA**

**☎ 052 226592**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலில் பின்தங்கிய மாணவரை வழிப்படுத்தல்.

கற்றலின்போது சக மாணவர்களுடன் ஈடுகொடுத்து அவர்களின் வேகத்திற்கேற்ப தன்னால் கற்க முடியாமலும் ஒரு விடயம் தொடர்பான புலமை விருப்பம் தேடல் என்பன குறைவாகவும் காணப்படுகின்ற மாணவர்கள் கற்றலில் பின்தங்கிய மாணவர்களாகக் கருதப்படுகின்றனர். இவ்வாறான மாணவர்களை இணங்கண்டு கற்றலுக்கு ஏற்றவகையில் மாணவர்களை வழிப்படுத்துதல் ஒவ்வொரு ஆசானதும் கடமையாகும்.

இதற்கான முதற் கட்டவேலையாக இவ்வாறான மாணவர்களின் நிலைமைக்கான காரணங்களைத் தேடியறிதல் வேண்டும். இவ்வகையில் மாணவனின் குடும்பநிலை மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. கற்றலுக்குப் பொருத்தமில்லாத உறுப்பினர்களின் நடத்தை வெளிப்பாடும் மூத்த சகோதரர்கள் கல்வியில் அக்கறையின்றி காணப்படுகின்றமை, பெற்றோர்களில் ஒருவர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்கின்றமை, பிள்ளைகள் தாத்தா பாட்டியின் அரவணைப்பில் விடப்படுகின்றமை போன்ற காரணங்களினாலும் மாணவர்கள் கற்றலில் பின்தங்கிய நிலைமைக்குச் செல்கின்றனர்.

அடுத்ததாக நாம் வாழும் சூழல் சகபாடிகள் மன அழுத்தம் போன்றனவும் பின்னணியாக அமைகின்றது. அதற்கும் மேலாக கற்றலில் தம்மைவிட மேல் நிலையிலுள்ள மீள்திறன் மாணவர்களுடன் ஒப்பிடல் குறைவான அடைவுகளுக்காக தாம் ஏளனத்திற்கு உட்படுவோம் என்ற அச்ச உணர்வும் தாம் ஒரு விடயத்தை முன்வைக்கத் தைரியமற்றிருத்தல் போன்ற காரணங்களும் மாணவன் பின்தங்கிய நிலைமைக்குக் காரணமாக அமைகின்றது. அத்துடன் அதிபர் ஆசிரியர் பாடசாலை கற்றல் போன்ற விடயங்கள் மீதான வெறுப்பும் எதுவித பிரச்சினைகளும் இல்லாத மாணவர்கள் கூட கற்றலில் விருப்பின்றி பின் தங்கிய மாணவர்களாகக் காணப்படுகின்றனர். வீட்டில் சகல தேவைகளும் பூர்த்தியாக்கப்பட்டு செல்வந்தனாகக் காணப்படும் மாணவர்களும் தொலைக்காட்சி கணனி இணையம் போன்ற ஊடகங்களில் அதிக பயன்பாடும் கூட கற்றலில் அலட்சியப் போக்கை ஏற்படுத்துவதற்கு ஏதவாக அமைகின்றது.

அவ்வாறான விடயங்களை தனியாள் வேறுபாட்டின மூலம் இணங்கண்டு பெற்றோர் பாதுகாவலர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்கி மாணவனுக்கு கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுத்து கற்றலில் விருப்பினை ஏற்படுத்தி ஆர்வத்தைத் தூண்டலாம். பின் தங்கிய மாணவர்மீது ஆசிரியர் கூடுதலான கவனத்தைச் செலுத்தி செயன்முறைக் கற்பித்தலை அதிகப்படுத்தி களப் பிரயாணம் நேரடித்தரிசனம் வெளிச்சூழல் கற்றல் நடவடிக்கை போன்றவை கற்பித்தலின் போது கையாளப்பட வேண்டும். தொடர்ந்தும் ஒரே ஆசிரியர் ஒரு வகுப்பில் கற்பிப்பதும் மாணவனுக்கு கற்றலில் சலிப்பை ஏற்படுத்தும். எனவே பாடங்களை ஆசிரியர்கள் மாறி மாறிக் கற்பிப்பதன் மூலமும் சகல மாணவர் மீதும் சமமான கணிப்புடன் இருத்தல் அவசியமாகும். இவ்வாறான செயற்பாடுடன் கூடிய ஆசிரியரே ஆளுமையும் செயற்றிறனும் கொண்டு கற்பித்தலில் வெற்றிபெற்றவராகக் கருதப்படுவார்.

தொகுப்பு: ஆசிரியை ஆர்.சுபாசினி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நலவாய மாநாடு

பொது நலவாய மாநாடு என்பது அடிமைப்பட்டுக்கிடந்து பின் சுதந்திரம் அடைந்த நாடுகளும் அடிமைப்படுத்திவைத்திருந்த அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் உள்ள அரசு தலைவர்கள் ஒன்று கூடும் உச்சிமாநாடே பொதுநலவாய மாநாடு ஆகும். (Comman wealth Heads of Government Meeting - CHOGM) இந்த உச்சி மாநாடானது 2 வருடங்களுக்கு ஒருமுறை அதன் உறுப்பு நாடுகளில், அந்நாட்டின் அரசு தலைவர்கள் அம் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார். அவரே அதன் பின்னுள்ள 2ஆண்டுகளுக்கும் நடப்புத் தலைவராகவும் இருப்பார்.

இந்த உச்சி மாநாட்டின் தலைவர் பிரித்தானியாவின் 2ம் எலிசபெத் மகாராணியாவார். இவர் 1973 ம் ஆண்டு ஒட்டாவா நகரில் இடம் பெற்ற உச்சி மாநாட்டிலே முதன் முதலில் பங்குபற்றியதிலிருந்து அனைத்து மாநாடுகளிலும் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.இருந்த போதிலும் 87 வயதாகும் இவர் உடல் நலக்குறைவினால் 2013 ம் ஆண்டு நடைபெற்ற உச்சி மாநாட்டிலே கலந்து கொள்ளவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவருக்குப் பதிலாக இளவரசர் சார்ள்ஸ் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயத்தின் வரலாறு

இம் மாநாடானது 1971ம் ஆண்டில் சிங்கப்பூரிலே முதன்முறையாக நடைபெற்றதிலிருந்து இதுவரையில் 21 தடவைகள் நடைபெற்றிருக்கின்றது. இறுதியாக 2011ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் பேர்த் நகரில் நடைபெற்றது. அந்த வகையில் இம்மாநாடு எங்கெங்கெல்லாம் நடைபெற்றிருக்கிறது என்பதைக் காட்டும் பட்டியல் பினவருமாறு அமைகின்றது.

| ஆண்டு | நாடு | நகரம் | நடைபெற்ற நாட்கள். |
|---|---|---|---|
| 1971 | சிங்கப்பூர் | சிங்கப்பூர் | ஜனவரி 14 - 22 வரை. |
| 1973 | கனடா | ஓட்டாவா | ஆகஸ்ட் 02 - 10 வரை. |
| 1975 | ஜமைக்கா | கிங்ஸ்டன் | ஏப்ரல் 29 -மே 06 வரை. |
| 1977 | ஐக்கிய ராஜ்யம் | இலண்டன் | ஜூன் 08 - 15 வரை. |
| 1979 | சாம்பியா | லுசாக்கா | ஆகஸ்ட் 01 - 07 வரை. |
| 1981 | அவுஸ்திரேலியா | மெல்போர்ன் | செப்டம்பர் 30 - அக்டோபர் 07 |
| 1983 | இந்தியா | கோவா | நவம்பர் 23 - 29 வரை. |
| 1985 | பகாமா | நசாவு | அக்டோபர் 16 - 22 வரை. |
| 1986 | ஐக்கிய ராஜ்யம் | இலண்டன் | ஆகஸ்ட் 03 - 05 வரை. |
| 1987 | கனடா | வானகூவர் | அக்டோபர் 13 - 17 வரை |
| 1989 | மலேசியா | கோலாலம்பூர் | அக்டோபர் 18 - 24 வரை. |
| 1991 | சிம்பாவே | ஹராரே | அக்டோபர் 16 - 21 வரை. |
| 1993 | சைப்ரஸ் | லிமார்சல் | அக்டோபர் 21 - 25 வரை. |
| 1995 | நியூசிலாந்து | ஆக்லண்ட் | நவம்பர் 10 - 13 வரை. |
| 1997 | ஐக்கிய ராஜ்யம் | எடின்பரோ | அக்டோபர் 24 -27 வரை. |
| 1999 | தென்னாபிரிக்கா | டர்பன். | நவம்பர் 12 - 14 வரை. |
| 2001 | அவுஸ்திரேலியா | கூலம் | மார்ச் 02 - 05வரை. |
| 2003 | நைஜீரியா | அபுஜா | டிசம்பர் 05 - 08 வரை. |
| 2005 | மால்ட்டா | வல்லெட்டா | நவம்பர் 25 -27 வரை. |
| 2007 | உகாண்டா | கம்பாலா | நவம்பர் 23 - 25 வரை. |
| 2009 | ஸ்பெயின் | டிரினிடாட்/டொபாகோ | நவம்பர் 27 - 29 வரை. |
| 2011 | அவுஸ்திரேலியா | பேர்த் | அக்டோபர் 28 - 30 வரை |
| 2013 | இலங்கை | கொழும்பு | நவம்பர் 15 - 17 வரை. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுநலவாயத்தின் நோக்கம்

இந்த உச்சி மாநாடுகளின் பிரதான நோக்கம் யாதெனின் ஒரு நாட்டிலே இடம் பெறுகின்ற சர்ச்சைகள் இனப்பிளவுகள் பாக்கிஸ்தான் பீஜித் தீவுகளிலே வெடித்த இராணுவப் புரட்சி போன்ற புரட்சிகள் இனவொதுக்கள் கொள்கைகள் (தென்னாபிரிக்கா) சிம்பாவே நாட்டில் இடம் பெற்ற தேர்தல் மோசடிகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் தொடர்பாக குழுநிலையாக விவாதித்து பொதுத்தீர்வு ஒன்று எட்டி அதனைக் கூட்டு அறிக்கையின் மூலம் வெளியிடுதல். இவ்வாறு நடைபெற்ற மாநாடானது 1997 அக்டோபர் 24- 27 ல் ஐக்கிய இராஜ்யத்தில் எடின்பரோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் ஒரு பொதுத் தீர்வு கொண்டுவரப்பட்டது. அதாவது எந்த நாட்டில் மாநாடு நடைபெறுகின்றதோ அந்த நாடு பொதுவான ஒரு கருப்பொருளை அறிவித்து அது தொடர்பாக விவாதித்து தீர்வு காண்பதுவே இதன் நோக்கமாகும். இதன்படியே ஒவ்வொரு ஈராண்டிற்கும் ஒருமுறை இம்மாநாடு நடைபெற்று வருகின்றது.


2013ம் ஆண்டின் CHOGM.

2013 என்றாலே அனைவருக்கும் ஞாபகம் வருவதும் நாவில் உச்சரிப்பதும் இந்த C H O G M. ஏனெனில் பொதுநாவாய உறுப்பு நாடு என்ற வகையில் எமது நாட்டில் முதன் முறையாக எமது நாட்டின் தலைவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் கொழும்பு தாமரைத்தடாகத்திலே மிகவும் சிறப்பான முறையில் 2013 நவம்பர் மாதம் 15ந் திகதி முதல் 17ஆந் திகதி வரை நடைபெற்றது. இந்த பொதுநலவாய மாநாட்டின் இவ்வருட கருப்பொருள் யாதெனின் பொருளாதார அபிவிருத்தியும் சமூக சமத்துவமும் (ECONOMIC DEVELOPMENT AND SOCIAL EQUALITY) ஆகும். இதனூடாக ஒவ்வொரு பிரதேசத்திலும் வீதி அபிவிருத்தி நகர அபிவிருத்தி போன்ற பல விடயங்கள் ஆய்வு செய்து விவாதிக்கப்பட்டது. அத்தோடு பல்லின மக்கள் வாழுகின்ற இலங்கை நாட்டில் சமூக சமத்துவத்தையும் ஒற்றுமையையும் பேணும் வகையில் இவ் விடயமும் விவாதிக்கப்பட்டது. அடுத்த மாநாடானது ஐக்கிய இராஜ்யத்தில் நடத்தப்பட வேண்டும். ஆனால் இது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

தொகுப்பு: ஆசிரியர் ஆ.கிருஸ்ணகுமார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியன்



கரும்பாறை!
உனக்குத்தான் அது
கரும்பாறை!
அது ஓர் அழுகிய சிற்பம்

கொஞ்சம் பொறு காட்டுகிறேன்

செதுக்கினான்
அடடா என் ஒரு
அழகிய சிற்பம்

பிள்ளை !
உனக்குத்தான் அவன் - "பிள்ளை"
அவன் ஒரு மகா சாதனையாளன்

கொஞ்சம் பொறு காட்டுகிறேன்

கற்பித்தான்!
அடடா என்ன ஒரு
அற்புத சாதனை
வியந்தோம் யாமும்

கரும்பாறையை செதுக்கினான் சிற்பி
பின்ளைகளை செதுக்குகிறான் ஆசிரியன்
அவன் உளியால் வலி கொடுத்து செதுக்கினான்
இவன் வலியாய் வழி காட்டி செதுக்குகிறான்.


சாதனை படைத்தது சிற்பங்கள்
அது எம் அருமைப் பிள்ளைகள்.

தொகுப்பு :- ஆசிரியை திருமதி.S.மரியஜெரின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*



# SRI VIJAYAS

SAREE CENTRE

**NO- 129, SECOND CROSS STEET,**
**COLOMBO-11**

**011 2324388   077 3813978**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பன்

"விலங்கொரு மக்களனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்" என்கிறார் வள்ளுவர். கல்வியறிவுடையோரே மனிதர் என்றும் கல்வியறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளம்புகிறது இக்குறள். இதன் மூலம் கல்வியறிவு படைத்தோரையே இவ்வுலகு மனிதராக மதிக்கும் என்பது புலனாகிறது. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும். எனின் அவன் கல்வியறிவை தேடிக்கொள்ள வேண்டும். கல்வியறிவை தேடிக்கொள்ள பல வழிகள் உண்டெனினும் அவற்றுள் சிறந்தது நூற்கல்வியாகும். இதற்கு நாம் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். சிறந்த அறிவினை பெற்றுக்கொள்ள நாம் நூல்களை வாசிக்க வேண்டும்.

"என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே!" என்கிறான் ஆங்கில கவிஞன் ஒருவன். இதனாலேயே நல்ல நூல்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள் என அறிஞர்கள் வழியுறுத்துகின்றனர். பள்ளிப்பருவம் இனியது. இப்பருவத்தில் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதனால் எம் மொழியாற்றல் விருத்தியுறும், கல்வியில் சிறந்து ஓங்கலாம், வாழ் நாள் முழுவதும் மகிழ்ச்சியான மன நிலைமையை கொண்டிருக்கலாம். வரலாறு, சமயம், தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைக்கதை என பலதரப்பட்ட நூல்கள் உள்ளன. இவற்றுள் நமது விருப்பிற்கேட்ப தெரிவு செய்து கற்றல் வேண்டும். நமது எதிர்கால முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைக்கும் பயன் தரும் புத்தகங்களை தேர்ந்து கற்றல் வேண்டும்.

சோர்வு ஏற்படும் போது தகுந்த துணை பனுவல்களேயாகும். புத்தகங்களை வாசிப்பவர்கள் ஒருபோதும் தனிமையை உணர்வதில்லை. ஓய்வு நேரங்களில் இவர்கள் நூல்களை நாடிச்செல்வதே இதற்கான காரணங்களாகும். வாழ்வில் ஏற்படும் சோர்வுகளையும், தோல்விகளையும் அவர்கள் விரும்பிய நூல்களை வாசித்து போக்கிக்கொள்ள முடியும். நூல்கள் நமக்கு அறிவை தரும் அறிய செல்வங்கள். மற்றைய செல்வங்கள் அழிவுறலாம். ஆனால் நூல்களால் நாம் பெற்ற அறிவை யாராலும் அழிக்க முடியாது. புத்தகங்களைப்போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது என ரஸ்கின் எனும் அறிஞர் கூறுகிறார். நூல்களை வாசிப்பதன் மூலம் தத்தம் வாழ்வை தாமே யாசித்து மகிழ முடியும். என்பது எனது கருத்து. பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றி யாதேனுமொரு படிப்பினையை பெற்றுக்கொள்வதற்காக வாசிக்க வேண்டும். கற்பனைக்கதைகளை மட்டுமன்றி இயல்பு வாழ்க்கையை கற்றுத்தரும் நூல்களை கற்றிட வேண்டும். நல்ல சிந்தனைகள் அடங்கிய நூல்களே நம் வாழ்க்கைக்கு உகந்தவையாகும். அறிவிற்கு துணைபுரியவல்ல நூல்களை தெரிவு செய்தல் சிறந்தது.

சிந்தனை விருத்திக்கு துணைபுரியும் வன்மைமிக்க நூல்கள் பல உள்ளன. சொல்வளம் பெறுகுவதற்கும், மொழியாற்றலில் முதன்மை பெறவும் வாசிப்பு உதவுகிறது. பல நூல்களை வாசிக்கும் போது பிழையற வாசிக்கவும், அவற்றால் கூறப்படும் கருத்துக்களை தெளிவாக விளங்கிக்கொள்ளவும் ஆற்றல் கிடைக்கிறது. காலப்போக்கில் அது தீராத பசியாக மாறி பல நூல்களை தேடிக்கற்க தூண்டுதலாகவும் அமையும். நல்ல நூல்களை கற்பதால் அறிவால் மட்டுமன்றி உணர்வாலும் உள்ளத்தாலும் கூட உயர்வடைய முடியம். மானிட சமூகத்துடன் நல்லுறவு கொள்ள முடியும். வாழ்க்கை முறைகள், விழுமியங்கள், பண்பாடுகள் என்பவற்றை உணர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பன் ...

எமது வாழ்வை சரியான முறையில் நடத்திச்செல்ல வாசிப்பு உதவுகிறது. வாசிப்பு ஒருவனை பூரண மனிதனாக்குகிறது என்பது அனைவரும் அறிந்த விடயம். புத்தகங்களை போன்ற சிறந்த நண்பர்கள் வேறு இல்லை. ஏனெனில் புத்தகங்கள் என்றும் எம்மோடிருக்கும் செல்வங்கள். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது சான்றோர் கூறிய அறிவுரை. காலமோ சிறியது கல்விக்கடலோ பெரியது இதனை நாம் உணர வேண்டும்.

நாம் வாழும் இந்த குறுகிய காலத்தில் கரையற்ற கல்வியின் சிறு தூரத்தையேனும் கடந்திட சிறந்த நூல்களை வாசிக்க நம்மை இயைபாக்கிக்கொள்ள வேண்டும்.

சிறந்த பனுவல்களை எம் சகாக்களாக்கிக்கொள்வோம். வாழ்வை வெற்றி கொள்வோம்".

திருமதி. எஸ். பவுலின். ஆசிரியர்

# ஒத்தக்கருத்து

| | | |
|---|---|---|
| யானை | - | ஆனை, கரி, கயம், குஞ்சரம், வேழம், தும்பி. |
| குதிரை | - | புரவி, பரி, மா, அசுவம் |
| பாம்பு | - | அரவம், கட்செவி, சர்ப்பம் |
| ஆசிரியர் | - | குரு, ஆசான், உபாத்தியாயன் |
| பெண் | - | அணுகு, தையல், காரிகை, கோதை |
| அரசன் | - | மன்னன், வேந்தன், கோ, கோன் |
| நண்பன் | - | தோழன்,சிநேகிதன், மித்திரன் |
| தோழி | - | சிநேகிதி, பாங்கி, சகி |
| நட்பு | - | சிநேகம், கேண்மை, தோழமை |
| குழந்தை | - | குழவி, சேய், பிள்ளை |
| காடு | - | வனம், அடவி, கானகம் |
| சந்திரன் | - | அம்புலி, நிலா, மதி |
| சூரியன் | - | தினகரன், பகலவன், ஞாயிறு |
| திங்கள் | - | மாதம், நாள், சந்திரன் |

தொகுப்பு விக்னேஸ்வரன் சதுர்சன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருபெறுவோம்

எந்த நேர ஓய்விலும் நீ
முன்னேற முயன்றாலே
வெற்றியின் விழுதாய் நீ
விண்ணைத் தொடுவாய்

உழைப்பவர்க்கு வெற்றி சொந்தம் - எனும்
உன்னத்ததை உணர்ந்திடுக
உண்மையாய் வாழ்ந்திடுக
உயர்வுகள் உன்வசம் ஆகும்
வேதனைகள் பல கடந்தால்
சாதனைகள் வசமாகும்
சான்றோரின் வழி காட்ட எம்மை
சரித்திரமாய் மாற்றிடுவோம்
சரிதம் சொல்லும் பெயருக்காக
சாத்வீக வழி நடப்போம்
சத்தியம் தனை உரைப்போம்
சக்தியாய் உரு பெருவோம்




தொகுப்பு- திருச்செல்வம் சந்தியா

# மழைத்துளி

இயற்கை அன்னைத்தரும் அருங்கொடையாம் மழைத்துளி
நிலத்தை பசுமையாக்கும் பெருங்கொடையாம் மழைத்துளி

# கல்வி

செல்வத்தில் உயர்ந்த செல்வம் கல்வி
எவராலும் அழிக்க முடியாத செல்வம் கல்வி
கொடுக்க கொடுக்க கூடும் செல்வம் கல்வி
குறைவிலா உயர் செல்வம் கல்வி
வாழ்வை வளமாக்கும் செல்வம் கல்வி



கருணாநிதி சர்மிளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்தகருத்து


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆவி | - | உயிர் | அங்காடி | - | சந்தை |
| பாம்பு | - | அரவம் | அன்பு | - | பாசம் |
| வறுமை | - | மிடி | எமன் | - | கூற்றுவன் |
| இனிப்பு | - | தித்திப்பு | செல்வந்தன் | - | தனவந்தன் |
| முகம் | - | வதனம் | பெயர் | - | நாமம் |
| பேதம் | - | பாகுபாடு | இரவு | - | நிசி |
| ஐயம் | - | சந்தேகம் | புதுமை | - | நவீனம் |
| மைந்தன் | - | மகன் | ஈகை | - | கொடை |
| சக்கரம் | - | சில்லு | மாஞ்சை | - | மயில் |
| வாஞ்சை | - | விருப்பு | புராதானம் | - | தொன்மை |

தொகுப்பு மோகன்ராஜ் யசிக்கா

# ஊக்கமுள்ளவனாக...

மனிதர்களுள் மூன்று வகை உண்டு. எந்த ஒரு செயலையும் செய்து பார்ப்போர் சிலர். செய்கின்ற செயலை வெறுமனே பார்த்து கொண்டிருப்பவர் பலர். செயலையும் செய்கின்றவரையும் விமர்சிப்பவர் சிலர். இந்த சிலரில் எப்போதும் முதலாம் குழவில் இயங்குகின்றவனே ஊக்கமுள்ள மனிதனாவான். எந்த ஒரு செயலையும் செய்து பார்ப்போம் அனுபவமும் தெளிவும் பெறுவோம்.

தொகுப்பு திருச்செல்வம் சந்தியா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

வாசல் இல்லாமல் வீடில்லை
வான் இல்லாமல் நிலவில்லை
நீர் இல்லாமல் மீனில்லை
கல்வி இல்லாமல் வாழ்க்கையே இல்லை
உயிர் வாழ மூச்சு அவசியம்
உலகில் வாழ கல்வி அவசியம்

ஆக்கம்:
திருப்பதி பிரேம்காந்த் தரம் 5

## அழகிய இயற்கை

எழில் கொஞ்சும் இயற்கையே
உன் அழகைக் கண்டு
என் மனம் வியந்து விட்டது
தாய் இல்லாமல் நான் இல்லை
என்பார்கள் ஆனால் இயற்கை இல்லாமல்
உலகில் அழகு இல்லை என்பேன் நான்

தொகுப்பு
அஸ்ரினா பாணு தரம் 5

## நான் ஒரு பறவையானால்

ஆகா!இப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிடைக்குமானால் நான் எவ்வளவு மகிழ்ச்சியடைவேன் நினைக்கவே இனிக்கிறது. நான் ஒரு பறவையானால் என் பட்டு வண்ணச் சிறகை விரித்து இப்பரந்த வானில் வட்டமடிப்பேன் பச்சைக்கிளிகளுடன் வண்ண வண்ணமாய் விளங்கும் வெட்டவெளிகளிலெல்லாம் உலாவி வருவேன். விந்தையான மொழிபேசி வேடிக்கை செய்து விளையாடுவேன.உலகை வலம் வர எனக்குக் கிடைத்த இரு சிறகுகளும் என்னை உல்லாசத்துக்கே அழைத்துச் செல்லும் எனக்கு புதியபுதிய நண்பர்கள் சேர்வார்கள் புதிய புதிய உறவுகள் என்னினத்தவர்களில் தேடிக் கொள்வேன் இனி நான் சுதந்திரமானவன் இனி என் வயிற்றுக்குத் தீனி போட எனக்கு கட்டுப்பாடு என்று ஒன்றும் இல்லை இனி உலகம் காணும் திருப்தியை நான் பெறுவேன்.

ஆக்கம்: சிவப்பிரகாசம் துபிலாசன்

## அம்மா

என்னை பத்து மாதம் சுமந்து பெற்றவலே உன் அன்பு என்றும் கடனை அடைக்க என்னால் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் முடியுமா? எனக்கு தெரியாத இவ் உலகை உன்னால் தான் நான் அறிந்தேன் தாயே இரவு முழுவதும் எனக்காக உன் தூக்கத்தை எனக்கு தந்தவளே - நீ என் மீது வைத்துள்ள அன்பை விட நான் உன்மேல் அன்பு செலுத்த முடியாதா?

நந்தகுமார் தனுஜா தரம் 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி எதிர்காலத்தை நிர்ணயிக்கும்



கல்வி கரையில்லாதது
அது காவியத்தில் சிறந்தது
கல்வி உரு இல்லாதது
அது உயிரிலும் மேலானது
கல்வி நிலையில்லாதது
அது நிரந்தரமானது
கல்வி இனமத பேதமற்றது
அது காலத்தால் அழியாதது
கல்வி கனிவான சுவையானது
அது கற்பிலும் மேலானது
கல்வி உடலை விட்டகலாதது
அது கல்லறையிலும் சிதையாதது
கல்வி விலையற்ற பொருளானது
அது விதியைக் கூட மாற்றக் கூடியது
கல்வி தடம் புரலாதது
அது தனித்துவத்தைக் கொண்டது
கல்வி பணத்தால் பெறமுடியாதது
அது பொதுவான சொத்தானது
கல்வி எழுத்தில் இடையாதது
அது எதிர்காலத்தை நிர்ணயிப்பது

தொகுப்பு: பாலகிருஸ்ணன் தயாளன் தரம் 5

# சிறந்த உதவி

ஒரு ஊரில் கௌசல்யா எனும் சிறுமி ஒருத்தி இருந்தாள். அவள் நற்குண நற்செயல் உதவி செய்யும் மனப்பான்மை உடையவள் அவளின் பெற்றோர் செல்வந்தர். அவள் ஒரு நாள் தனது காரிலே பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது ஒரு சிறுமி பாதையில் அடிப்பட்டுக் கிடந்தாள் அதைப்பார்த்ததும் கௌசல்யா மனமிரங்கினாள் உடனடியாக காரில் இருந்து இறங்கினாள் அங்கிருந்தோரின் உதவியுடன் தனது காரிலே அச்சிறுமியை அழைத்துக் கொண்டு வைத்திய சாலைக்குச் சென்றாள். அச்சிறுமியின் குடும்பத்தினர் அவளுக்கு நன்றி கூறினார். அவளின் பெற்றோர் இப்படிப்பட்ட பிள்ளையை பெற்றதால் சந்தோசத்தில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

ஆக்கம் - சந்திரகுமார் நிதுசா, தரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்கள்

## நிறங்களின் வகை

| வெப்ப வர்ணம் | குளிர் வர்ணம் | வெள்ளை வர்ணம் |
|---|---|---|
| சிவப்பு | ஊதா | இருட்டான |
| செம்மஞ்சள் | நீலம் | இடங்களை |
| மஞ்சள் | பச்சை | பிரகாச மாக்கும் |

வெப்ப வர்ணங்கள் கண்களை உறுத்தக் கூடிய கவர்ச்சிகரமானது.

குளிர் வர்ணங்கள் கண்களுக்கு இதம் அளிக்கக் கூடியன.

## மூல வர்ணங்கள் பிரதான வர்ணங்கள்

சிவப்பு மஞ்சள் நீலம்

## வர்ணங்கள் காட்டும் சமிஞ்சைகள்

1. வெள்ளை - சமாதானம்
2. அமைதி - துக்கம்
3. கறுப்பு - துக்கம்
4. சிவப்பு - அபாயம்
5. பச்சை - சம்மதம்
6. கமல்ராஜ் விதுர்ஷனன்

ஆக்கம்: சந்திரகுமார் நிதுசா, தரம் 5

# தொடர் மொழிக்கு ஒரு மொழி

1) வேறுதுணை இல்லை என ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல் — சரணாகதி
2) சிறை தண்டனை பெற்றவர் — கைதி
3) மற்றவரைப் பற்றி அக்கரை இல்லாதவன் — சுயநலவாதி
4) இரு பொருள் அமையத் தொடுப்பது — சிலேடை
5) ஆதாரமற்ற செய்திகளால் புனையப்பட்ட கற்பனைக்கதை — கட்டுக்கதை
6) வழக்கில் குற்றம் சாட்டுபவன் — பிரதிவாதி
7) அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறுவது? — அகராதி
8) புராதன பொருட்களை சேகரித்து வைக்குமிடம் — நூதனசாலை
9) சூரிய சந்திரனைச் சுற்றி தோன்றும் வட்டம் — பரிவட்டம்
10) துறவிகள் வயோதிபர் ஆகியோர் தங்குவதற்கும் அவர்களுக்கு உணவு வழங்குவதற்குரிய இடம் — சத்திரம்

தொகுப்பு : கதிரேசநாதன் நிவேத்திகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த உதவி

| | |
|---|---|
| இலங்கையின் மிக நீள மான நதி | மகாவலிகங்கை |
| இலங்கையின் மிகப்பெரிய நீர் வீழ்ச்சி | பம்பரகந்த |
| இலங்கையின் முதல் ஜனாதிபதி | திரு.வில்லியம் கோபல்லாவ |
| இலங்கையின் முதல் பெண் பிரதமர் | திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க |
| இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப் படுத்தப்பட்ட ஆண்டு | 1945 |
| இலங்கையின் தேசிய மரம் | நாகமரம் |
| இலங்கையின் தேசப்படத்தை வரைந்தவர் | தொலமி |

ஆக்கம்: சந்திரகுமார் நிதுசா, தரம் 5

# சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் 1863ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் நாள் கல்கத்தா நகரில் பிறந்தார்.அவரின் தந்தையார் விசுவநாதத்தர் அவர் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞ்ராக விளங்கினார் தாயார் புவனேஸ்வரி தேவியார் அவர்கள் நரேந்திரநாத தத்தர் என்ற பெயரை தம்மகனுக்குச் சூட்டினார். எல்லோரும் அவரை நரேந்திரன் என்றே அழைத்தனர்.

இந்து சமயம் உலகலாவிய மதமாக எழுச்சி பெறுவதற்கு வித்திட்டவர் சுவாமி விவேகாநந்தர். உன்னை திருத்து உலகம் திருந்தும் என்ற வாக்கிற்கிணங்க தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்த பெருமைக்குறியவர்.

எழுமின், விழிமின், கருதிய கருமம் கைகூடும் வரை நில்லாது வெல்மின் என போதிதத்தும் சமயப்பணி என்பது சமூகப்பணியே எனக் கூறியும் இந்து சமூகத்தின் ஆன்மீக எழுச்சிக்கு வித்திட்ட துறவி இவர் இராம கிருஸ்ண மிஷனின் ஸ்த்தாபகர் ஆவார்.

சுவாமி விவேகானந்தரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை.

1.தெளிவான சிந்தனை
2.திட சங்கற்பம்
3.அமைதியான மனம்
4.தியாகம்
5.உண்மை
6.நிஸ்டை
7.தன்னடக்கம்
8.தன்னம்பிக்கை
9.பயமின்மை
10.சகிப்புதன்மை
11.சிரத்தை
12.பொறுமை
13.உழைப்பு
14தன்னிறைவு
15.வினயம்
16.நல்லொழுக்கம்
17.இறையன்பு
18.சுயமரியாதை
19.பலம்
20.தைரியம்
21.சேவை மனப்பான்மை
22.கருணை
23.தன்னலமின்மை

யாருடைய இதயம் ஏழைக்காக இரத்த கண்ணீர் வடிக்கிறதோ அவரை மகாத்மா என குறிப்பிட்டுள்ளார்

கலைக்குமார் விதுஷாலினி - படித்து சுவைத்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக்களும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையும்


| விளையாட்டுக்கள் | முறை அணியில் உள்ளவர்கள் | விளையாடும் வீரர்கள் |
|---|---|---|
| கிரிக்கட் | 16 பேர் | 11 பேர் |
| உதைப்பந்தாட்டம் | 15 பேர் | 11 பேர் |
| கரப்பந்து | 12 பேர் | 06 பேர் |
| கூரைப்பந்தாட்டம் | 12 பேர் | 05 பேர் |
| வலைப்பந்தாட்டம் | 12 பேர் | 07 பேர் |
| எல்லே | 20 பேர் | 12-16பேர் |
| ஹொக்கி | 20 பேர் | 11 பேர் |

பொதுவறிவு - தொகுப்பு : கதிரேசநாதன் நிவேத்திகா

# விளையாட்டுக்களும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையும்

1) முக்கனிகள் எவை? மா, பலா, வாழை
2) ஒரு மனிதனின் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு எத்தனை முறை? 72முறை
3) மனித வலுவினால் இயங்கும் போக்குவரத்து சாதனம்? துவிச்சக்கர வண்டி
4) மிகச் சிறிய இதயம் கொண்ட விலங்கு? சிங்கம்
5) மிக வேகமாக ஓடும் விலங்கு? சிறுத்தை புலி
6) ஒரு மனிதனின் உடலிலுள்ள எழும்புகளின் எண்ணிக்கை? 206
7) மிகப் பெரிய கோள் எது? வியாழன் கோள்
8) மிகச் சிறிய கோள் எது? புதன்
9) உடல் வெப்ப நிலையை அளக்கப் பயன்படுவது? உடல் வெப்பமானி
10) சிறுவர்களுக்கு காணப்படும் பாற் பற்கள் எத்தனை? 20

பத்மநாதன் நவீன் குமார் தரம் 5





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1) இரவு பகல் உண்டாகக் காரணம் யாது? புவிசுழற்சி
2) இலங்கையில் பெரிய மாவட்டம் எது? அநுராதபுரம்
3) இலங்கையின் தலைநகரம் எது? ஹீ ஜெயவர்த்தனபுர கோட்டை
4) இலங்கையின் இயற்கை துறைமுகம் எது? திருகோணமலை
5) புவியின் துணைக்கிரகம் எது? சந்திரன்
6) இலங்கையில் புகழ் பூத்த சுவர் ஓவியம் எது? சீகிரியா ஓவிய
7) வெப்பமானியில் பயன்படு:ம் திரவ உலோகம் எது? இரசம்
8) வளர்ந்த மனிதனுக்கு மொத்தம் எத்தனை பற்கள் ? 32 (முப்பத்து இரண்டு )
9) உலகில் மிகப் பெரிய கண்டம் எது? ஆசியா
10) கப்பலை செலுத்துபவன் யார்? மாலுமி, மீகாமன்
11) கனவனை இழந்தவள் யார்? விதவை
12) மனைவியை இழந்தவன் யார்? தபுதாரன்
13) இலங்கையில் முதலில் அமைக்கப்பட்ட குளம் எது? அபயவாவி
14) இலங்கையில் மிக உயரமான மலை எது? பீதுருதாலகால மலை
15) இலங்கையில் மிக நீளமான நதி எது? மகாவலி கங்கை
16) இலங்கையில் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி எது? பம்பரகந்த
17) சிறிய இதயம் கொண்ட மிருகம் எது? சிங்கம்
18) தோலினால் சுவாசிக்கும் பிராணி எது? மண்புழு
19) மிகப்பெரிய முட்டையிடும் பறவை எது? தீக்கோழி
20) மண்ணிற்குள் வாழும் பிராணிகள் எவை? எறும்பு மண்புழு கறையான்
21) கண்ணை திறந்தபடி தூங்கும் பிராணி? மீன்
22) கூடுகட்ட தெரியாத பறவை எது? குயில்
23) ஆரோக்கியமான மனிதனின் இதயத்துடிப்பு எத்தனை? 72 தடவைகள்

# இராசிச் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| மேசம் | - செம்மறிக்கடா | ரிசபம் | - எருது |
| மிதுனம் | - இரட்டையர் | கடகம் | - நண்டு |
| சிம்மம் | - சிங்கம் | துலாம் | - தராசு |
| கன்னி | - கன்னி | விருச்சகம் | -தேள் தனு வில்லம்பு |
| மகரம் | - கடலரக்கன் | கும்பம் | - நீர் பானைக்குடம் |
| மீனம் | மீன் | | |

12 மாதங்களிலும் தோன்றும் இராசிச் சக்கரம் சக்கரம்

பெண்களின் எட்டுவகைப் பருவம்

7 வயது வரை - பேதை　　8 முதல் 11 வரை - பெதுமை

12 முதல் 13வரை - மங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

1986 காலப்பகுதியில் திரு. எஸ். கிருஸ்ணன் அவர்கள் இப்பாடசாலையின் அதிபரானார் நீண்டகால பிரச்சினையாகவிருந்த இராகலை கனிஸ்ட தமிழ் வித்தியாலயம் இணைப்பு தொடர்பாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு சிங்கள கனிஸ்ட பாடசாலைக்கு அஞ்சல் அலுவலகத்திற்கு அருகிலும் கனிஸ்ட தமிழ் பாடசாலை இராகலை தமிழ் மகா வித்தியாலயத்துடனும் இணைக்கப்பட்டது இது. 1987.12.23 ஆம் திகதி கல்விச் செயலாளர் இல.03சிபி.பி.எஸ்.எம். 3.2.4. இல் ஏக்கர் காணி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாக டி.பீ. எம் ஹேரத் பாடசாலை தகவல்கள் கூறுகின்றன. மேலும் இக்காலப்பகுதியில் சிங்கள கனிஸ்ட பாடசாலை அதிபராக திரு.டீ.கே. பெத்தேவிதான அவர்களும் தமிழ் கனிஸ்ட வித்தியாலய அதிபராக திருமதி. லக்ஸ்மி அவர்களும் பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரு கட்டங்களை கொண்ட சிங்கள கனிஸ்ட பாடசாயானது 1935 செப்டம்பர் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது அதிபர் வு.ஆ.தென்னகோன் அவர்களது தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது 1935 தொடக்கம் 1987 வரைக்கும் முழுமையான ஒரு சிங்கள பாடசாலையாகவே இது காணப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராகலை தமிழ் மகா வித்தியாலயத்துடன் இணைந்து இயங்கிய போதிலும் 2003 காலப்பகுதியில் ஆரம்பப்பிரிவின் மாணவர் தொகை அதிகம் காரணமாகவும் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று பெறப்பட்டதன் காரணமாகவும் ஆரம்பப் பிரிவுக்கு பொறுப்பாக திரு.**S**.பிரங்ளின் அவர்கள் நியமிக்கப்பட்டார் 2006-2007 காலப்பகுதியில் இவர் இப்பகுதிக்கு பொறுப்பாக இருந்ததுடன் புலமை பரிசில் பரீட்சையில் அதிக மாணவரை சித்தியடைய செய்வதற்கான பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டார் தொடர்ந்து 2008 இல் திரு.ஆ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆரும்ப பிரிவுக்கான அதிபராக பொறுப்பேற்றார். ஆரம்பப் பிரிவை தனியாக ஒரு பிரிவாக மாற்றியமைக்க முனைந்தார். 2010 இல் 1000 பாடசாலைகள் அபிவிருத்தி செய்தல் வேலைத்திட்டத்தில் முற்று முழுதாக தனியான நிர்வாகமாக இப் பாடசாலை இயங்கத் தொடங்கியது.இப்பாடசாலை அதிபராக திரு.பழனி பத்மநாதன் அதிபர் தரம் 1 அவர்கள் நியமிக்கப்பட்டார் மணவர்கள் 21 ஆசிரியர்கள் 3 கட்டங்கள் அண்ணளவாக 2 ஏக்கர் காணி என்பன. இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு.S கிருஸ்னன் அவர்களால் பெற்றுக் கொடுத்த பாடசாலை என்பதால் இக்கல்லூரிக்கு பெற்றோர் அனுமதியுடன் மத்திய மாகாண கல்விச் திணைக்கள வேண்டு கோளுக்கு இணங்க இராகலை கிருஸ்ணன் ஜுனியர் கல்லூரி என பெயர் சூட்டப்பட்டது.

பாடசாலை தனியாக இயங்கத் தொடங்கிய பின் தமிழ் மொழித் தின உப மட்ட போட்டிகளை எமது பாடசாலையே முன் நின்று நடாத்தியது தமிழ் மொழித்தின போட்டியில் உபவலய வலய மட்ட மாகாண மட்ட அகில இலங்கை ரீதியளவில் வெற்றி பெற்று எமது பாடசாலை வலப்பனை வலய பாடசாலைகளில் முதன்மையாக திகழ்கின்றது ஆங்கில தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதன்மை பெற்றது பாடசாலைக்கு வெறும் கட்டங்கள் தளபாடங்கள் மனித வளங்களை மட்டும் வழங்கி எவ்வித நிதி நிலைமை அற்ற போதும் தரம் 1 இற்கு அனுமதி பெறும் மாணவரின் பெற்றோர் சிற்சில உதவிகளை முன் வந்து செய்துள்ளனர் 2 வருட காலமாக வாணிவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

எது எவ்வாறாயினும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் நகர்புற வர்த்தகர்கள் நலன் விரும்பிகள் பாடசாலையின் முன்னேற்றத்துக்காக அயராது பாடுபட்டு உலைக்கினறனர் கல்வி கற்று பனிமணியின் பனிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் அவ்வவ்ஆபாது பாடசாலையின் முன்னேற்றத்தை அவதானித்த வன்னமே உள்ளனர் இப்பாடசாலையின் முன்னேற்றத்துக்கு காரண கருத்தாக அமைந்தது.


தொடரட்டும் உங்கள் வெற்றி

தொடரட்டும் உங்கள் வெற்றி

செயலாளர்-எ.கணேஷ்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செஞ்சிலுவை மற்றும் சுகாதாரக்குழு.



இஸ்லாம் மன்ற மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கில மன்றக்குழு.



தமிழ் இலக்கிய மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லாங் குழலாக மாறும் மூங்கில்கள்

காட்டிலுள்ள மூங்கில்கள் ஒவ்வொன்றும் தான் ஒரு புல்லாங்குழலாக மாறிவிடுவோம் என்ற எதிர்பார்ப்பில் வளர்வதில்லை. ஆனாலும் ஒவ்வொரு மூங்கிலும் "தான் ஒரு புல்லாங்குழலாக வருவேன்" என்ற அவாவில் வளரும். அதை போன்றே ஒவ்வொரு பிள்ளையும் கல்லூரியில் காலடி எடுத்து வைக்கும் போதே தானும் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நோக்கிலேயே கல்லூரிப் பயணப் பாதையை ஆரம்பிக்கின்றது. இந் நோக்கமானது பிள்ளையின் எதிர்பார்பாக மட்டுமன்றி பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விசப்பரீட்சையாகவும் கௌரவப் பரீட்சையாகவும் கூட அமைந்து விடுகின்றது

ஆனாலும் கூட வெற்றி அடைவதற்காக அம்மாணவர்கள் செய்கின்ற தியாகங்கள் இருக்கின்றதே அவற்றினை ஒரு கணம் எண்ணும் போது எமது உள்ளங்களையும் நெகிழ வைக்கின்றது.அவ்வாறு அவர்கள் செய்யும் தியாகங்கள் தான் என்ன நேரத்திற்கு உண்ணுவதில்லை உறங்குவதில்லை விளையாடுவதில்லை இன்னும் ஏன் சிறுவர்களுக்கான அனைத்து உரிமைகளும் பரிக்கப்படுகின்றது. தரம் மூன்றிலிருந்து புலமைப்பரிசில் வரை அவர்கள் ஒரு இயந்திர மனிதனாகவும் கூட மாறுகின்றார்கள். காலையில் 4.00 மணி ஆரம்பிக்கும் அவர்களது கற்றலானது இரவு 12.00 மணிக்கும் முடிவடைவதில்லை. உறங்கும் போது கூட நிம்மதியான உறக்கமில்லை சிறகொடிந்த பறவையொன்று எவ்வாறு கூட்டுக்குள் முடங்கிக் கிடக்குமோ அதனைப் போன்றே இம் மாணவர்களும் பாடசாலை மேலதிக வகுப்பு பாடநுல் என்ற சுற்று வட்டத்துக்குள் முடக்கி வைக்கப்படுகின்றனர் இவர்களுக்கு வழங்கப்படும் கல்வியானது எவ்வாறானது தெரியுமா? ஒரு சிறிய பான போத்தலில் கொளள்ளக்கூடிய அளவையும் தாண்டி மேலும் மேலும் அமிழ்த்தி அமிழ்த்தி நீர் ஊற்றுவதற்கு சமமானதாகும்.அவ்வாறு மேலதிக நீர் விழிந்துச் செல்வதையும் கீழே சிந்தவிடாமல் ஏற்றுக் கொள்வதைப் போன்று அச்சிறுவர்கள் சுமக்க முடியாத சுமையையும் அவர்களின் பிஞ்சு மூளை ஏற்றுக் கொண்டு தான் இருக்கிறது.இவ்வாறான பல. சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்து பரீட்சையில் திருப்தியாக விடை எழுதிய சந்தோசத்தில் பெறு பேறை எதிர்பார்த்திருந்த சிறார்களின் உள்ளங்களுக்கு குதூகளித்து சந்தோசமாக ஆடிப்பாடி கொண்டாடி இருக்க வேண்டிய சிறுவர் தினமான அன்று வெளிவந்த பெறுபேறானது வெட்டுப்புள்ளி என்னும் அவர்களின் சூதாட்டத்தின் காரணமாக கொஞ்சமாக ஒட்டியிருந்த சிறுவர் உரிமையும் பரிபோய்விடும் செயலாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லாங் குழலாக மாறும் மூங்கில்கள் ...

இப்பெறுபேறு ஒரு சில புல்லாங்குழலையும் அநேக மூங்கில்களையுமே பரிசாக தந்தது இவ்விடயமானது புல்லாங்குழலாக மாறிய மூங்கில்களின் கண்ணீரிலும் முழுமையாக புல்லாங்குழலாக மாறிய மூங்கில்களின் சந்தோசத்திலும் சங்கமமாகிய சிறுவர் தினமாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது இருப்பினும் இப்பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானித்து கொள்ள வேண்டும். வெற்றிப் பெறாத மாணவர்களையும் தேற்றி விளையாட்டுத்துறை கலைத்துறை போன்றவற்றிலும் ஈடுபட ஊக்குவிப்பதுடன் கல்வி பொது தராதரச் சாதாரணதர பரீட்சை உயர் தரம் போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்து வாழ்க்கையில் முன்னேற வழி வகுக்க வேண்டும். அதனை விடுத்து பிள்ளைகளை கடுஞ்சொற்களால் திட்டுவதும் தண்டிப்பதும் தவறான செயலாகும் ஏனெனில் புலமைப்பரிசில் பரீட்சையோடு பிள்ளையின் கல்வி முற்றும் பெறுகிறது. என்ற நிலைப்பாட்டை விடுத்து பிள்ளையின் வாழ்க்கை சிறப்புடனும் சந்தோசகரமாகவும் வெற்றிகரமாகவும் விளங்க பெற்றோர்களே என்றென்றும் உறுதுணையாக நின்று ஊக்குவிப்பதோடு ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படும் பெற்றோர்களின் பிள்ளைகள் ஒவ்வொன்றும் எதிர்காலத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் படும் புல்லாங்குழலாக மாறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

வகுப்பு

ஆசிரியர் செல்வி க.சுபாசினி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பால் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேவன் | - | தேவி | பாட்டன் | - | பாட்டி |
| தலைவன் | - | தலைவி | சிறுவன் | - | சிறுமி |
| பிரான் | - | பிராட்டி | குமாரன் | - | குமாரி |
| அடியவன் | - | அடியவள் | அரசன் | - | அரசி |
| பேரன் | - | பேத்தி | குறவன் | - | குறத்தி |
| அழகன் | - | அழகி | புதல்வன் | - | புதல்வி |
| எசமான் | - | எசமானி | முடவன் | - | முடத்தி |
| பண்டிதன் | - | பண்டிதை | | | |

தொகுப்பு நவரட்ணம் உமாதேவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகலை கிருஸ்ணன் ஜூனியர் கல்லூரியின் வரலாற்றுப் பின்னணி

இலங்கை இந்திய சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் வெள்ளையர்கள் இங்கு தேயிலை தோட்டங்களை நிர்வகித்து வந்த நேரம் அவர்களது நேரடிச் தொடர்பில் 5ம் வகுப்புகள் வரையே தோட்ட பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருந்தன. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் தேயிலைச் செடியை நாசப்படுத்த கூடாது என்பதற்காக பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன

தரம் 5 இற்கும் மேல் கற்க முடியாத நிலை அவ்வாறு கற்பதாயின் பல மைல்களுக்கு அப்பாலுள்ள நுவரெலியா, கண்டி ஆகிய நகரங்களை நோக்கி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பொருளாதார கஷ்டங்களினாலும் வெவ்வேறு காரணங்களினாலும் தொழிலாளர்களின் பிள்ளைகள் 5ம் வகுப்பிலேயே கல்விக்கு முழுக்கு போட்டு விட்டு தொழிலாளர்களாகவே அடையாளப்படுத்திக் கொண்ட துரதிஷ்ட நிலை ஏற்பட்ட காலம் அது.

இக்காலக்கட்டத்தில் இராகலையில் அஞ்சல் அலுவலகத்திற்கு அருகாமையில் தோட்டப்பாடசாலை 5ம் வகுப்பு வரை தலைமை ஆசிரியர் திரு.பாக்கியநாதன் அவர்களது தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதே போல கட்டிட வசதியேயின்றி மாதாந்தம் 15ரூபா வாடகை செலுத்தி முதன் முதலில் இப்பாடசாலை அத்திவாரமிடப்பட்டு செயற்பட்டது.

## அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான்

நுவரெலியா பாராளமன்ற உறுப்பினராகவிருந்த கௌரவ .எஸ்.தொண்டமான் அவர்களது அயராத பெரும் முயற்சியின் பயனாக இராகலை அரசினர் உயர்தர தமிழ் பாடசாலை 03.03.1947 இல் ஆரம்பமாகியுள்ளது அப்போது தலைமைப் பொறுப்பை கந்தப்பு ஆசிரியர் ஏற்றிருநதார்.

தொடர்ச்சியாக இப்பாடசாலை பல அதிபர்கள் பெற்றோர், ஆசிரியர் சங்கம், நகர்ப்புற வர்த்தகர்கள் பலரின் முயற்சியால் உயர்நிலையை அடைந்து க.பொ. த (சா த) க.பொ.த (உ. தரம்) என பல்வேறு ஏணிப்படிகளை தாண்டி உயர்தர பாடசாலையானது.

உதவி அதிபர்-திருமதி.ச.சாந்தமாலா
வகுப்பு ஆசிரியர் செல்வி சு.சுபாசினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியே வெற்றியின் முதற்படி

நாம் எந்த நிலையிலும் தோல்வியை எதிர்கொள்ள முடியும்ஆபிரகாம்லிங்கன்வாழ க்கையில் பல தோலவியை கண்டாலும் இறுதியில் அமெரிக்கநாட்டின ஜனாதிபதி ஆனார்.நாம் புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் தோல்வியடைந்து விட்டோமே என கவலைபடக்கூடாது.அதுமட்டுமல்ல போட்டியில் தோல்விடைந்தாலும் அதை நினைத்து வருத்தப்படக்கூடாது. ரைட்சகோதரர்கள் துவிச்சககரவண்டிக்கு இரண்டு இறக்கைகளையும் சிறிய இயந்திரம் ஒன்றை பொறுத்திபறக்கவிட்டார்கள். அம்முயற்சி தோலவியடைந்தாலும் தனது விடா முயற்சியின் பயனாக ஆகாயவிமானத்தை கண்டுபிடித்தனர்.அதுபோல நாமும்தொடர்ந்து முயற்சி செய்து வாழ்க்கையில் முன்னேறுவோம்.

ஆக்கம்- இரவீந்திரகுமார் மோனிஷா ( 5 )



# அம்மா

அந்த மலைகளை விடவும்
ஆகாயத்தை விடவும்
என் அம்மா எனக்கு பெரியவளாம்
எவர் எத்தனை உயர்வாய்
இருக்கின்ற போதும்
எனக்கு இந்த பூமியால்
என் அம்மா உயர்ந்தவளாம்
அவள் தாழ் பணிவேன்
அவள் சொல் கேட்பேன்
அவள் வழி நடப்பேன் என்
அம்மாவைப் போலவே நானிருப்பேன்



ஆக்கம்: ஜோதிலிங்கம் எழில்வேந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கல்வியும் மாணவர்கள் இடைவிலகலும்

பாடசாலைக் கல்வியினை முழுமையாகத் தொடராமல் இடையில் நிறுத்திக்கொள்ளல் இடைவிலகல் எனப்படும். கல்வியின் முக்கியத்துவம் அதிகரித்துக் காணப்படும் இக்காலகட்டத்தில் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவது எதிர்காலத்தில் கல்வி அறிவு குறைந்த சமூகம் அதிகரித்து பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

இவ்வாறு இடைவிலகல் பெரும்பாலும் மலையகப் பாடசாலைகளிலேயே காணப்படுகின்றது. இலங்கை அரசாங்கமானது கல்விக்காகப் பெருந் தொகைப் பணத்தை செலவிடுவதுடன் கல்வி அபிவிருத்திக்காக பல்வேறுவிதமான செயற்ப ாடுகளையும்செயற்திட்டங்களையும்அறிமுகப்படுத்துகின்றது. அவற்றில் சிலவற்றை அவதானிப்போம்.

- 1943 ம் ஆண்டு இலவசக் கல்வி
- 1981 ம் ஆண்டு இலவச பாடநூல் விநியொகம்.
- 1990 ம் ஆண்டு இலவச மதிய போசன திட்டம்.
- 1993 ம் ஆண்டு இலவச சீருடை போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும் மாணவர்களின் போசனை மட்ட வளர்ச்சிக்காக பால் விநியோகத் திட்டத்தினை தற்போது நடைமுறைப்படுத்தியுள்ளது. அரசாங்கம் இவ்வாறான செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்திய போதும் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துச் செல்கின்றது. இதற்கான காரணங்களைஆராய்ந்து பார்ப்போமானால்

- வறுமை
- குடும்ப சூழலும் சமூகச்சூழலும்
- மொழிப் பிரச்சினை விளங்கிக் கொள்ள முடியாமை
- தாழ்வுச் சிக்கசல்
- தண்டனை.
- பயம்
- அதிகமான வேலைப்பளு
- பெற்றோர் ஆசிரியர்களின் கணிப்புத் தேவைக் குறைபாடு.
- ஆசிரியர்கள் மாணவர்களை சமமாகப்பாராமை
- சிறுவர்கள்தொழிலுக்கு அமர்த்தப்படுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகம்.
- மாணவர் உடல் உள குறைபாடு
- சமவயது குழுக்களுடன் இணையாத நிலை.
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடு.
- கலைத்திட்டத்தில் கணப்படும் கடினத்தன்மை.
- தொழிலின்மையும் பெற்றோரின் வெளிநாட்டு மோகமும். போன்ற காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இடைவிலகளைத் தடுப்பதற்கு ஆசிரியர்களாகிய நாங்கள் சில தீர்வுகளை மேற்கொள்ளலாம்.

- தனியாள் வேறுபாட்டின் மூலம் பிரச்சினைகள அறிந்து தீர்வுகளை மேற்கொள்ளல்.
- இயலுமாவரையில் பாராட்டுக்களை வழங்குதல்.
- மாணவருக்கு ஏற்றவகையில் ஆசிரியர் தமது நடத்தைகளை மாற்றிக்கொள்ளுதல்.
- மாணவர்களுடன் அன்பாகப் பேசி நெருங்கிய நட்பை வளர்த்துக் கெனாள்ளுதல்.
- பாரபட்சமின்றி மாணவர்களுக்கு அன்பு செலுத்துதல்.
- பிரச்சினைகளைத் தேடியறிந்து தீர்வு காணுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் பாடசாலையிலிருந்து மாணவர் இடைவிலகலைத் தவிர்க்கலாம்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கு முறைசாராக் கல்வியின் மூலம் வாழ்க்கைக்கான தொழில்சார் கல்வியூட்டி சமூகத்தில் சமன்பாட்டை மேம்படுத்தலாம் இதற்காக அரசாங்கம் கிராம சேவகர் பொலிஸ் அதிகாரிகள் சமுர்தி அதிகாரிகள் ஊடாக இடைவிலகிய மாணவர்களைக் தேடிக் கண்டறிந்து அவர்களை மீண்டும் பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது..

இவ்வாறு தனிமனிதன் குடும்பம் சமூகம் கிராமம் அரசு என அனைத்து வழிகளிலும் உறுதிப்பாடு பேணப்படுமானால் மட்டுமே இடைவிலகளை முற்றாக நீக்கி காலத்தால்அழியாத கல்விச் செல்வத்தை அனைவருக்கும் பெற்றுக்கொடுத்து நற்பிரஜைகளை கொண்ட சமுகமாக.எழுத்றிவு வீதத்தில் 100 வீதம் கெண்ட நாடாக வளப்படுத்தலாம் என்பது உறுதி.

"கற்றலுக்கான செலவு செலவல்ல மூலதனம்"

"கற்றோருக்கு சென்றஇடமெலாம் சிறப்பு:"

ஆக்கம்: தியாகராஜா விஜயானந்தன் - ஆசியர்:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2013ம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களும் பெற்றோர்களும்.



ராதா - பிரதிஷ்யா
157 புள்ளிகள்.



செல்லதுரை - சிவவதனி.
156 புள்ளிகள்.



மாரிமுத்து - அஸ்வரின்சன்.
157 புள்ளிகள்.



பத்மநாதன் - குமுதினி
164 புள்ளிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கதிரேசநாதன் - நிவேதிகா
170 புள்ளிகள்.



மொஹமட் பவுசார்- பாத்திமாவிஸ்னா
173 புள்ளிகள்.



மூர்த்தி - நிதுரிஷன்
156 புள்ளிகள்.




பாலகிருஷ்ணன் - விதுர்சன்
170 புள்ளிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரகலாதன் - இவோன் கிறிஸ்டினா
184 புள்ளிகள்.



ஜோதிலிங்கம் - எழில்வேந்தன்
161 புள்ளிகள்.



சிவனேஸ்வரன்- தனுசிகா
155 புள்ளிகள்



திருச்செல்வம் - சந்தியா
161 புள்ளிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 5 எல்லே குழுவினரும் ஆசிரியர்களும்.



தரம் 5 கிரிக்கட் குழுவினரும் ஆசிரியரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2012ம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய 1மாணவர்களும் கற்பித்த ஆசிரியர்களும்.



சுகாதாரக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]




[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பதி - பிரேம்காந்
169 புள்ளிகள்.



இந்துமாமன்ற நிரிவாகக்குழு.



சிவக்குமார் - துஷாந்தன்.
178 புள்ளிகள்.




ஆனந்தராஜ் - சிவானி
167 புள்ளிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




@ Designed & Printed by amrutha | ragala - 077 5882774 / 075 0353686

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org